துயர்மிகு சம்பவத்திலும் எடப்பாடி அரசியல் லாபம் பெறத் துடிக்கலாமா?

கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என்ன!

வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் அரசு இது!

அமைச்சர் தங்கம் தென்னரசு – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 2-

நிதி மற்றும் சுற்றுச் சூழல் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டிருக் கும் அறிக்கை அவரது பதட்டத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக் கின்றது. எவ்வகையிலாவது இத்துயர் மிகு சம்பவத்திலிருந்து அரசியல் லாபம் பெற முடியுமா என்று துடியாய்த் துடிப்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரிகின்றது.

செய்தியாளர் சந்திப்பில் உண்மை கள் உணர்த்தப்படும் போது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தத்தளித்து வழக்கம் போலவே ஓர் உளறல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என் னவென்பதை அரசு அமைத்திருக் கும் ஆணையமும் காவல் துறை

விசாரணையும் முறையாக வெளிக் கொணரும் எனச் செய்தியாளர் களிடம் அரசு அதிகாரிகள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர். நடைபெற்ற ஒரு பெரும் துயரச் சம்பவம் குறித் தான உண்மை நிலவரங்களை அரசின் உயர் அலுவலர்கள் நாட்டு மக்களுக்கு விளக்கிச் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது? அரசின் முக்கிய அங்கமாக விளங்கும் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் அத்தகு விளக்கங்களைச் செய்தி யாளர்கள் வாயிலாக வெகுமக்களுக் கும் சென்றடையச் செய்வது இத்தகுச் சூழலில் அவர்களின் கடமை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தன் வசதிக்காக மறந்துவிட்டு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார்.

நள்ளிரவில் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விட்டு, மக்களிடம் விளக்கமளிக்காமல் ஓடி ஒளியும் அதி முக அரசைப் போல இல்லாமல், வெளிப்படைத் தன்மையுடன் இயங் கும் அரசு இது என்பதைத் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் ஆதாயம் தேடுவதைத் தவிர்த்து, பாதிக்கப்பட்டவர்களின் உணர்வு களை மதித்து நடந்துகொள்வது எதிர்க்கட்சிகளின் கடமையும் கூட என் பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தனது வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருவெறும்பூர் அருகே உள்ள காட்டூர் ராஜப்பா நகரில் பொதுமக்களின் கோரிக்கை இருதயபுரம் கூட்டுறவு வங்கி லிட் தமிழக பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புதிதாக தொடங்கி வைத்து 92 பேருக்கு ஒரு கோடியை 62 லட்சம் மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

அடிப்படையில் அனைவரும் மனி தர்களாக செயல்பட வேண்டும். இது போன்று நடந்த சம்பவத்தில் யார் மீது தவறு இருக்கிறது என்பது விசாரணையில் நிச்சயம் நிரூபிக்கப்படும். முதலமைச்சர் தெளிவாக தெரிவித்து இருக்கிறார் யார் மீது தவறு இருந்தாலும் நிச்ச யம் நடவடிக்கை எடுக்கப்படும். அப் படிப்பட்ட சூழ்நிலையில் ப்ளே கேம் என்பதை ஆரம்பிப்பது தேவையில் லாத ஒன்று தவறான ஒன்று. எப்ப டிப்பட்ட ஒரு சூழலாக இருந்தாலும் மனிதர்களோடு மனிதர்களுக்காக நாம் இருக்க வேண்டும்.

இதுவரை நான் பார்த்திராத ஒன்று!

தமிழக வெற்றி கழக தலைவர் கரூரில் நடந்த பிரச்சினைக்கு பிறகு ஒரு ஆறுதல் கூட சொல்லாமல் அந்த இடத்திலிருந்து புறப்படுவதோ தன்னுடைய பாதுகாப்பை மட்டும் நினைப்பதோ என்னை பொருத்தவரை நான் இதுவரை பார்த்திராத ஒன்று. அதை யும் தாண்டி அவர்களால் இருக்க முடிய வில்லை என் றால் கட்சியின் அடுத்த கட்ட தலைவர்கள் கூட உதவி செய்யாத ஒரு சூழ்நிலை பார்க் கும்போது மனி தாபிமானம் இல்லை என தான் தெரிகிறது. மற்ற கட்சித் தலைவர்கள் அனைவரை யும் பார்க்க முடிந்தது அனைவரும் அங்கு வந்து ஆறுதல் தெரிவித்தார்கள்.

த.வெ.க. தலைவர் கரூர் விவகா ரம் தொடர்பாக 4 மணி நேரத்திற்கு பிறகு 'எக்ஸ்' தளத்தில் பதிவிடுகிறார், ஆதவ் அர்ஜுனன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு விட்டு அதை டெலிட் செய்து இருக்கிறார்.

வன்முறையை தூண்டுவது போல் பேசுவதா?

மக்களைப் பற்றி அவர்களின் பாதுகாப்பை பற்றியும் அவர்களுக்கு ஆறுதலாக இருப்பதை பற்றி தான் யோசிக்க வேண்டும் இன்னும் பிரச் சினையை தூண்டுவது போல, வன்முறையை தூண்டுவது போல் பேசுவது நிச்சயமாக உச்சகட்ட பொறுப்பின்மை.

ஒரு பிரச்சினையை அமைதி யாக்குவது தான் எந்த அரசியல் கட் சியாக இருந்தாலும் கடமை. வேறு எந்த இடத்திலும் வன்முறையை தூண்டக்கூடிய விதத்தில் உயிர் சேதமோ அல்லது வன்முறையை தூண்டுவதோ வேறு பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். அரசியல் ஆதா யம் தேடுகிறார்கள் என்று தான் நினைக்க முடியும்.

கரூர் விவகாரம் தொடர்பாக ஒரு தனிநபர் ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது. அவர்கள் விசார ணையை மறுநாளே தொடங்கி இருக்கிறார்கள். அதைத் தாண்டி எப்படிப்பட்ட விசாரணைகள் வேண் டும் என அவர்கள் நினைக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

தி சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்க (கோவை மண்டலம்) நிர்வாகிகள்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தி சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (கோவை மண்டலம்) (பதிவு எண். 444/CBE, பேரவை இணைப்பு எண். 329) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 29.09.2025 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் **திரு. சி.கருணாநிதி** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர்	–	M. ரங்கநாதன் (பணி எண் C21763)
துணைத் தலைவர்கள்	–	1) A.S. அண்ணாதுரை (பணி எண் E01286)
		2) D. சுரேஷ் தியாப்ளஷ் (பணி எண் 014624)
		3) M. ஸ்ரீரங்கப் பெருமாள் (பணி எண் 024538)
		4) E. கனகவேல் (பணி எண் C21027)
		5) N. ரங்கநாதன் (பணி எண் C24107)
பொதுச்செயலாளர்	–	P. துரைசாமி (பணி எண் 018139)
செயலாளர்கள்	–	1) K. மோகன்குமார் (பணி எண் 015733)
		2) P.S. ஜீவானந்தம் (பணி எண் 017886)
		3) G. வெங்கடாசலபதி (பணி எண் 017623)
		4) P. குணசேகரன் (பணி எண் 015892)
		5) K. ரவீந்திரன் (பணி எண் 017923)
பொருளாளர்	–	R. செல்லப்பன் (பணி எண் 018265)

இடம்: கலைஞரகம் **மு.சண்முகம்,** Ex.MP

நாள்: 01.10.2025 பொதுச்செயலாளர்

தொ.மு.ச. பேரவை

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றம் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அறிவியலறிஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மற்றும் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் ஆகியோர் 24 அறிவியலறிஞர்களுக்கு விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ.50 ஆயிரத்திற்கான காசோலைகளை வழங்கி பாராட்டினர்.

காவல்துறை நிபந்தனைகளை ஏற்க மறுத்தது ஏன்?

கரூர் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பு த.வெ.க. மட்டுமே!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ காட்டமான பேட்டி!

சென்னை, அக். 2 -

"கரூர் துயர சம்பவத்திற்கு முழு காரணம் தமிழக வெற்றிக் கழகம் மட்டுமே" என்றும் "கரூர் சம்பவத்தில் முதலமைச்சர் மின்னல் வேகத்தில் செயல்பட்டு இருக்கிறார் " என்றும்

தமிழ்நாட்டில் இதுவரை விஜய் பயன்படுத்தும் வாகனம் போன்று யாரும் பயன்படுத்தியது கிடையாது. காவல்துறை நிபந்தனைகளை ஏன் விஜய் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் வைகோ கேள்வி" எழுப்பி யுள்ளார். மேலும் "சி.பி.ஐ. பா.ஜ..கவின் கைக்கருவி, பா.ஜ.க. என்ன சொல்லுகிறதோ அதைத்தான் சி.பி.ஐ. செய்வார்கள், திட்டமிட்டு அ.தி.மு.க. பா.ஜ.க. சி.பி.ஐ. கேட்கி றது என்று மதிமுக பொதுசெயலாளர் வைகோ பேட்டியளித்துள்ளார்."

சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் கரூர் கொடுந்துயரம் காரணம் யார்? என் பது குறித்து ம.தி.மு.க. பொதுசெயலாளர் வைகோ செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :–

தமிழக வரலாற்றிலேயே நடைபெறாத கொடுந்துயர் பேர் அவலம் கரூரில் நடை பெற்றுள்ளதாகவும் பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கு வருகிற கூட் டத்தை ஒழுங்குபடுத்த இயக்கத்தை முழு மையாக ஈடுபடுத்த வேண்டும் என்ற அவர் கரூர் சம்பவத்தில் பொறுப்பேற்க வேண்டி யது தமிழக வெற்றி கழகம்தான்.

தொண்டர்படை அமைத்த கலைஞர்!

மேலும் கூறிய அவர் இரவு 7 மணிக்கு தான் கரூர் எல்லைக்கு விஜய் போகிறார், பெரும் விபத்து நடக்கக்கூடாது என்பதை அறிந்து விஜய் எச்சரிக்கையாக செயல் பட்டு இருக்க வேண்டும் என்ற அவர் 70 அடி நீளத்திற்கு ஒரு பெரிய வாகனம் ஒரு சாலையில் திரும்பக் கூட முடியாது அதில் விஜய் வருவதாகவும் சாலையில் இருப்ப வர்கள் முண்டியடித்துக் கொண்டு நெருங்கி வரும் பொழுது வாகனத்தின் கதவைத் திறந்து தொண்டர்களை பார்க்கலாம் ஆனால் அதை விஜய் செய்யவில்லை என்றும் விஜய் பிரச்சாரம் மேற்கொள்ளும் பொழுதே 4,5 பேர் இறந்ததாக செய்திகள் வந்தது என கூறிய அவர் 1500 பேருக்கு நேர்காணல் செய்து 300 பேரை தேர்ந்தெ டுத்து தி.மு.க.வில் தொண்டர் படை அமைத்தார் கலைஞர்.

ஒரு நிகழ்ச்சி நடந்தால் முழுமையாக நடந்து முடியும் வரை பதற்றம் இருக்க வேண்டும். கூட்டத்தில் தண்ணீர் இல்லா மல் தொண்டர்கள் கேட்கும்பொழுது விஜய் தண்ணீரை வீசுகிறார், இங்கு வந்து மின் சாரம் இல்லை என்று கூறுவதாகவும் திட்ட மிட்டு தமிழக வெற்றி கழகத்தினர் தமிழ் நாடு அரசு மீதும் சட்டமன்ற உறுப்பினர் மீதும் முதலமைச்சர் மீது தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர் எனவும் தவ றான குற்றச்சாட்டை முன் வைக்கிறேன்.

சி.பி.ஐ.யை இயக்குவது மோடி தான்!

ஏதாவது விபரீதங்கள் வரக்கூடாது என்

றுதான் மருத்துவ மனைகளில் மருத்துவர் கள் ஆயத்தமாக இருந்தனர் என கூறிய வைகோ ஒரு தரப்பினர் சொல்கிறார்கள் தமிழக வெற்றிக் கழகத்தினர் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்தனர் என்று அபாண்டமான குற்றச்சாட்டை தனிநபர் ஆணையம் மீது தமிழக வெற்றி கழகத்தினர் கூறுகின்றனர், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு பொழுது தனி நபர் ஆணையத்தை அமைத்தவர் எடப்பாடி என்றும் சி.பி.ஐ. பாரபட்சம் இல் லாமல் நடுநிலையோடு அறிக்கையை கொடுத்து விடுவார்களா? என கேள்வி எழுப்பிய அவர் சிபிஐ இயக்குவது மோடி தான் என்றும்

இங்கு இருக்கக்கூடிய அரசு மீது களங் கம் ஏற்படுத்த இவர்கள் ஏன் முயலக் கூடாது என அறிவுறுத்திய அவர் எதிர்க்கட் சிகளை நசுக்க அனைத்து வேலைகளை யும் பா.ஜ.க. செய்து வருகிறது.

மின்னல் வேகத்தில் செயல்பட்ட முதல்வர்!

8, 10 மாத குழந்தைகளை ஏன் பொது மக்கள் கூட்டத்திற்கு தூக்கிச் செல்ல வேண்டும், பொதுமக்கள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என ஆதங்க மாக பேசிய வைக்கோ அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கூட உடனடியாக அங்கு சென்றதாகவும் கரூர் சம்பவத்தில் முதலமைச்சர் மின்னல் வேகத்தில் செயல் பட்டு இருக்கிறார் என்றும் திமுகவை தொடர்ந்து குறிவைத்து தாக்குவதாகவும் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் தொடர்ந்து பேசி வருகிறார்கள் என பேசிய அவர் அனுபவமிக்கவர் எண்ணற்ற திரைப்படங்களில் நடித்தவர் தங்களைப் பார்க்க வந்த மக்கள் மிதிபட்டு சாகிறார்கள், அவர் பேசும் பொழுதே நான்கைந்து பேர் இறந்ததாக செய்திகள் வருகிறது, தமிழக வெற்றி கழகத்தை சேர்ந்தவர்கள் ஆம்பு லன்சை ஏற்பாடு செய்ததாக செய்திகள் வருகிறது என்றும் ஆட்சியாளர்கள் மீது பொறுப்பாளியாக முயற்சிப்பதை கடுமை யாக கண்டிக்கிறேன்.

ஆட்சியாளர்கள் மீது பழிசுமத்துவதா?

ஆட்சியாளர்கள் மீது குற்றம் சாட்டுவது 1 சதவீதம் கூட நம்ப முடியாதது, கட்ட மைப்போடு கட்சியில் ஆட்களை ஏற்பாடு செய்து கூட்டத்தை முறைப்படுத்த பொறுப்பு உண்டு என தெரிவித்த அவர் சொன்ன நேரத்திற்கு செல்ல முடியவில்லை என்றா லும் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் தாமதமாக செல்லுங்கள், ஆட்சியா ளர்கள் மீது பழி சுமத்தும் போக்கிற்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன்.

அதிக கவனம் செலுத்தி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு தான் உண்டு விஜய் கரூ ருக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை பார்க்க வேண்டும் என்று சொல்லி இருந் தால் காவல்துறை அனுமதி கொடுத்திருக் கும் எனவும் முப்பெரும் விழாவை 30 பேர் விழா என்று விஜய் கேலி செய்வது எதற்கு? ஒரு பெரும் நிகழ்ச்சி நடக்கும் என்னாகுமோ என்ற பெரும் பயம் இருக்க வேண்டும்.

விஜய் பயன்படுத்தும் வாகனம் போன்று தமிழ்நாட்டில் இதுவரை யாரும் அது போன்ற வாகனத்தை பயன்படுத்தியது கிடையாது.

காவல்துறை நிபந்தனைகளை ஏன் விஜய் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிக்கு தி.மு.க. வரக்கூடாது என்பதற் காக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை சொல்லி வருகிறது.

போலீஸ் பிரமாதமாக செயல்பட்டு என்னை பாதுகாப்பாக அழைத்து வந்தனர் என்று விஜய் கரூர் கூட்டத்தில் கூறியதை குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் உண்மையை யார் கண்ட றிவது? சந்தடி சாக்கில் தமிழ்நாட்டின் உள்ளே நுழைந்து விடலாம் என்று பா.ஜ.க. நினைப்பதாகவும் எங்காவது சந்து பொந்து கிடைக்குமா என்றும் பார்க்கிறது.

முதலமைச்சரை விமர்சிப்பது தவறு!

சம்பவம் நடைபெற்ற உடனடியாகவே முதலமைச்சர் கரூருக்கு சென்றார். முதல மைச்சரை விமர்சிப்பது மிக மிகத் தவறு.

தமிழக வெற்றிக் கழகத்தினால் மட் டுமே கரூர் பெருந்துயரம் நடந்துள்ளது சி.பி.ஐ. பா.ஜ.க.வின் கைக்கருவி, பா.ஜ.க. என்ன சொல்லுகிறதோ அதைத்தான் சி. பி.ஐ. செய்வார்கள், திட்டமிட்டு அ.தி.மு.க. பா.ஜ.க. சி.பி.ஐ. கேட்கிறது, ஒரு நபர் ஆணையத்தைப்பற்றி பேச எடப்பாடி பழ னிச்சாமிக்கு என்ன யோக்கியம் தகுதி உள் ளது. விஜயை விசாரிக்கலாம். கைது செய் யக்கூடாது. அ.தி.மு.க. பா.ஜ.க. பின்னணியில் விஜய் கைது என்று பரப்பி வருகிறது. விஜய் கைது தொடர்பாக அர சாங்கத்திடம் அப்படி ஒரு திட்டம் நான் அறிந்த வரையில் இல்லை.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலா ளர் வைகோ அவர்கள் பேட்டியளித்தார்.

விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று (2.10.2025–வியாழக் கிழமை) விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல் **4.10.2025-சனிக்கிழமை** அன்று வெளிவரும்.

- நிர்வாகி

தருமபுரி மாவட்டம் அடிலம் ஊராட்சி பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை மாவட்ட ஆட்சியர் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்து அன்றைய தினம் பெறப்பட்ட மனுக்கள் மீது அன்றே நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்ட மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் எம்.வீ.டி.கோபால், அடிலம்.அன்பழகன், பாலக்கோடு தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், ஏ.வி.குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.